பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 23 | வியாழக்கிழமை | 09.11.2023 | அதிர்வு 100

## நில விடுவிப்பு குறித்து விசேட கலந்துரையாடல்

(ந.லோகதயாளன்)

வடக்கு, கிழக்கில் வனப் பகுதிகளாக வர்த்தமானி வெளியிட்ட நிலங்களை மீள விடுவிப்பது தொடர்பில் நேற்று மாலை ஜனாதிபதி செயலக மேலதிக செயலாளர்கள் ஏற்பாட்டில் விசேட 09

### நாடாளுமன்றத்தில் நேற்று சுமந்திரன் அறிவிப்பு

# சட்ட ரீதியாக நாட்டில் இன்று பொலிஸ்மா அதிபர் இல்லை

### இவ்விடயத்தில் தவறாக நடக்கும் ஜனாதிபதிக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரேரணையைக் கொண்டுவர முடியும்

“சட்டத்தின் அடிப்படையில் நாட்டில் தற்போது பொலிஸ்மா அதிபர் கிடையாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொலிஸ்மா அதிபர் நியமனம் விவகாரத்தில் அரசமைப்பை மீறியுள்ளார். ஆகவே, அவருக்கு எதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணை கொண்டு வர முடியும்.”

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். 09



## மின்சாரம் தாக்கி 14 வயது சிறுவன் பரிதாப உயிரிழப்பு



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - நிலாவெளி பொலிஸ் பிரிவுக்கு ஆறாம் கட்டை ஐயப்பன் கோயிலில் பூசை உதவியாளராகக் 07

## இடைக்காலத் தடை உத்தரவு: ஒருதலைப்பட்சமான தீர்ப்பே!

### நீதியரசர் மீது ரொஷான் பகிரங்கக் குற்றச்சாட்டு

“இலங்கை கிரிக்கெட் இடைக்கால குழுவுக்கு பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவு ஒருதலைபட்சமானது. மேன்முறையீட்டு நீதி மன்றத்தின் தலைவர் பந்துல கருணாரத்னவை நாடாளுமன்ற ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமை குழுவுக்கு அழைத்து 03



## மகன் விஷம் அருந்திய அதிர்ச்சியில் தந்தை சாவு

### யாழ்ப்பாணத்தில் சோகம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்பாணம், சோனெமு – கோப்பாய் மத்திய பகுதியில் மகன் ஒருவர் விஷம் அருந்தியால் அதிர்ச்சியடைந்த தந்தை உயிரிழந்துள்ளார்.

முத்துத்தம்பி விவேகானந்தம் (வயது 70) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். 07

### கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் உட்பட அதிகாரிகளை நீக்குதல்:

## நாடாளுமன்றத்தில் இன்று வாக்கெடுப்பு

“ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் உட்பட அதிகாரிகளை நீக்குதல்” எனும் தலைப்பில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி ஆகியன ஒன்றிணைந்து கொண்டுவரும் பிரேரணை மீதான விவாதத்தை இன்று நடத்துவதற்குப் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற நாடாளுமன்ற 07

Sri Lanka Cricket




நேற்று நாடாளுமன்றத்தில், நீதிமன்ற அவமதிப்புத் தொடர்பான சட்ட மூலத்தின் மீது ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆற்றிய சட்ட நிபுணத்துவ உரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று எண்ணுகிறேன்.

சட்ட வியாக்கியானங்கள், விளக்கங்கள் மிகுந்த அந்த உரை சாதாரண பொதுமகனுக்கு விளங்கிக் கொள்வதற்கு சிரமமாக இருக்கலாம். ஆனால் நீதித் 07

# தூத்துக்குடியில் இருந்து காங்கேசன்துறைக்கு விரைவில் மீண்டும் பயணிகள் சொகுசு கப்பல்




தமிழகத்தின் தூத்துக்குடியில் இருந்து இலங்கையின் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு மீண்டும் பயணிகள் சொகுசு கப்பல் போக்குவரத்து எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ஆரம்பமாகவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தை மையமாகக் கொண்டு, தூத்துக்குடி – காங்கேசன்துறை, தூத்துக்குடி – கொழும்பு, ராமேஸ்வரம் – தூத்துக்குடி – கன்னியாகுமரி இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்படவுள்ளதாக அந்த செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்காக மும்பையில் நடந்த சர்வதேச கடல்சார் உச்சி மாநாட்டில் துபாயில் உள்ள தனியார் நிறுவனம் மற்றும் வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக, தூத்துக்குடி – காங்கேசன்துறை இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து எதிர்வரும் ஜனவரியில் தொடங்கப்படவுள்ளதுடன், இதற்கான கப்பல் விரைவில் தூத்துக்குடிக்கு வரவுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

இந்தக் கப்பலானது தினசரி 120 கடல் மைல் தொலைவை 3 முதல் 4 மணி நேரத்தில் கடக்கும் எனவும் 400 பயணிகள், 40 கார்கள், 28 பஸ்கள் மற்றும் டிரக்குகளை கொண்டு செல்ல முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சாதாரண கட்டணமாக 6000 இந்திய ரூபாவும், டீரளைநெளள ஊடயளள பயணிகளிடம் 12,000 இந்திய ரூபா கட்டணமும் அறவிடப்படவுள்ளது.

சுற்றுலாவிற்கு சொந்தமான கார்கள் மற்றும் பஸ்களில் செல்பவர்கள், தங்கள் கார்கள் மற்றும் பஸ்களையும் கப்பலில் ஏற்றி இலங்கைக்கு கொண்டு சென்று, மீண்டும் திரும்பி வர முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சொகுசு கப்பலில் வரி இல்லாத விற்பனைக் கடைகள், ஹோட்டல்கள் உள்ளிட்ட பல்வேறு நவீன வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

இந்த கப்பலில் பயணிக்க விமானப் பயணத்திற்கு தேவைப்படுவதைப் போன்று விசா, கடவுச் சீட்டு இருக்க வேண்டியது கட்டாயமாகும்.

பயணிகள் 80 கிலோகிராம் எடையை மட்டும் தங்களுடன் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

### ஆசிரியர் குறிப்பு

1. தூத்துக்குடியில் இருந்து நேரடியாக காங்கேசன்துறைக்குக் கப்பல் சேவை நடைபெறுவதாயின் அக்கப்பல் மன்னார் – இராமேஸ்வரம் இடையிலான இராமர் பாலப் பகுதியை ஊடறுத்தே செல்லவேண்டும். சேது சமுத்திரத்தை ஆழமாக்கும் நடவடிக்கை பூர்த்தியாகாத நிலையில் இப்பாதை ஊடான போக்குவரத்து சாத்தியமா என்ற கேள்வி எழுகிறது. எனினும் தூத்துக்குடியில் இருந்து கொழும்பு சென்று, பின்னர் அங்கிருந்து இலங்கையைச் சுற்றிக் கொண்டு காங்கேசன்துறைக்கு கப்பல் சென்று அதே பாதையில் திரும்ப முடியும். ஆனால் அதற்கு நீண்ட நேரம் பிடிக்கும்.

2.இந்திய, இலங்கை வாகனங்கள் ஒரு நாட்டில் இருந்து மற்றைய நாட்டுக்குள் பயணிப்பது தொடர்பான இணக்க ஏற்பாடுகள் இன்னும் நடைமுறைக்கு வராத நிலையில் அதுவும் சாத்தியமா என்ற கேள்வியும் எழுகின்றது. (ஆ–ர்)



# இடைக்காலத் தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...) உடன் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். ஒரு சில நீதிபதிகள் தங்களின் தனிப்பட்ட நோக்கங்களுக்காக நீதிமன்றக் கட்டமைப்பை மலினப்படுத்தும் வகையில் செயற்படுவதற்கு இடமளிக்க முடியாது."

– இவ்வாறு விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

"இலங்கை கிரிக்கெட் இடைக்கால குழு நியமனம் தொடர்பில் அமைச்சரவைக்கு அறிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. அமைச்சர் என்ற ரீதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு அந்தக் குழுவை நியமித்தேன். உண்மை நோக்கத்துடன் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கினோம். சூது சம்மியா? அல்லது ரொஷான் ரணசிங்கவா? என்பதை ஜனாதிபதி தீர்மானிக்க வேண்டும். மறுபுறம் ஊழல் மிக்க கிரிக்கெட் சபைக்கு அடிபணிவதா அல்லது கிரிக்கெட் சபையைத் தூய்மைப்படுத்துவதா என்பதை 225 உறுப்பினர்களும் தீர்மானிக்க வேண்டும்" – என்றும் அவர் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கையின் கிரிக்கெட் தொடர்பில் ஒட்டுமொத்த மக்களும் பாரிய எதிர்பார்ப்பில் உள்ளார்கள். கிரிக்கெட் சபையில் இடம்பெறும் ஊழல், மோசடி தொடர்பில் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பு எனக்கு உண்டு.

2021 காலப்பகுதியில் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு பலமாக இருந்தது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரச நிதியை மோசடி செய்யவில்லை. ஆனால், அவர் தவறான ஒருசில தீர்மானங்களை எடுத்தார். தவறான தீர்மானங்களை நான் கடுமையாக எதிர்த்தேன். தவறைச் சுட்டிக்காட்டும் தற்றுணிவு எனக்கு உண்டு.

மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்து அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மக்களின் கருத்துக்கு மதிப்பளித்து பதவி விலகினார். அதனை சிறந்ததொரு எடுத்துக்காட்டாக கிரிக்கெட் சபையின் ஊழல்வாதிகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்து 2023.05.22 ஆம் திகதி நான் விளையாட்டுத்துறை, இளைஞர் விவகாரங்கள் அமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டேன். மோசடியால் மிதமிஞ்சிய விளையாட்டுத்துறையை சீரமைக்க உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தேன். கிராமிய மட்டத்திலான விளையாட்டுத்துறையை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்துக்கு கொண்டு செல்வதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தேன். 2022 முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மாத்திரம் 160 பதக்கங்களை இலங்கை வீரர் மற்றும் வீராங்களைகள் நாட்டுக்குக் கொண்டு வந்துள்ளார்கள் என்பதைப் பெருமையுடன் குறிப்பிட்டுக் கொள்கின்றேன்.

கிரிக்கெட் சபையின் மோசடி தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஆராய்வதற்காக ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி குசானி சரோஜனி தலைமையில் ஐவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழு சமர்பித்த அறிக்கையைக் கொண்டு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்குமாறு சட்டமா அதிபர் உட்பட சகல தரப்பினருக்கு வலியுறுத்தியுள்ளேன்.

2018 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான நிதியியல் தொடர்பான விபரங்களை கணக்காய்வு செய்யுமாறு சட்டமா அதிபரிடம் நான் பலமுறை வலியுறுத்தினேன். "அவ்வாறு முடியாது, வேண்டுமாயின் ஒரு வருட கால நிதியியல் விடயங்களை கணக்காய்வு செய்யலாம்" என்று சட்டமா அதிபர் குறிப்பிட்டதற்கு அமைய 2020 ஆம் ஆண்டு ரி 20 போட்டி தொடர்பில் கணக்காய்வு செய்யப்பட்டது.

ரி 20 போட்டி தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை 2023.09.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.இந்த அறிக்கையை ஜனாதிபதி, சட்டமா அதிபர் உள்ளிட்ட தரப்பினருக்கு அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினேன். அத்துடன் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில், ஆசிய கிரிக்கெட் கவுன்சிலுக்கு அனுப்பி வைத்தேன்.

இவ்வாறான பின்னணியில் கிரிக்கெட் சபை மீது நாட்டு மக்கள் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தி போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.மக்கள் போராட்டத்தைத் தடுப்பதற்காக இடைக்காலக் குழுவை நியமித்தேன். ஜனாதிபதியைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு. ஊழல், மோசடியாளர்கள் ஜனாதிபதியை ஆக்கிரமித்துக் கொள்ள முயற்சிக்கின்றார்கள். கிரிக்கெட் தொடர்பில் அவருக்குத் தவறான விடயங்களைக் குறிப்பிடுகின்றார்கள்.

உண்மை நோக்கத்துக்காகவே நாங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கினோம். இடைக்கால குழு நியமனம் தொடர்பில் நான் அமைச்சரவைக்கும், ஜனாதிபதிக்கும் அறிவிக்கவில்லை என ஜனாதிபதி ஊடகப் பிரிவு செய்தி வெளியிட்டதை ஏற்றுக்கொள்ள முடியாது. அமைச்சர் என்ற ரீதியில் எனக்குள்ள அதிகாரத்துக்கு அமையவே நான் இடைக்காலக் குழுவை நியமித்தேன். இந்த விடயத்தில் நான் முறையற்ற வகையில் செயற்படவில்லை.

கிரிக்கெட் சபையின் ஊழல், மோசடியாளர்களை நீக்கி நான் நியமித்த இடைக்கால குழுவுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்தத் தீர்ப்பு ஒருதலைப்பட்சமானது. நேற்று (நேற்றுமுன்தினம்) முற்பகல் 10.40 மணியளவில் எனக்கு நோட்டீஸ் அனுப்பி வைக்கப்பட்டது. முற்பக்லை 11.10 மணிக்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்தத் தடை உத்தரவு தொடர்பில் அமைச்சர் என்ற ரீதியில் என்னிடம் ஏதும் கேட்கப்படவில்லை.

இந்த விவகாரத்தில் முன்னிலையாகுமாறு சட்டமா அதிபரிடம் நான் பல முறை வலியுறுத்தினேன். ஆனால், அவர் அதனைக் கருத்தில்கொள்ளவில்லை. மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் பந்துல கருணாரத்ன கிரிக்கெட் தொடர்பான வழக்குகளில் விசேட கவனம் செலுத்தியுள்ளார். கிரிக்கெட் சபையின் தலைவர் சம்மி சில்வாவுடன் நெருக்கமான உறவைக் கொண்டுள்ள அசேல ரெகவுக்கும், நீதியரசர் பந்துல கருணாரத்னவுக்கும் இடையில் உறவு முறை காணப்படுகின்றது. ஆகவே, இந்தத் தடை உத்தரவு ஒருதலைப்பட்சமானது என்பதைத் தெளிவாக விளங்கிக்கொள்ள முடிகின்றது." – என்றார்.

இதன்போது சபைக்குத் தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர், "நீதிபதிகளின் பெயர்களையும், அவர்களின் தனிப்பட்ட விடயங்களையும் குறிப்பிடுவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்" – என்றார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் ரொஷான் ரணசிங்க, "நான் நீதிமன்றத்தை அவமதிக்கவில்லை. ஒட்டுமொத்த நீதிபதிகளையும் நான் தவறாகக் குறிப்பிடவில்லை. ஒருசில நீதிபதிகள் தங்களின் தனிப்பட்ட நோக்கங்களுக்காக நீதிக்கட்டமைப்பைத் தவறாகப் பயன்படுத்துவதைச் சட்டம் இயற்றும் நாடாளுமன்றத்தில் பேசாமல் எங்கு போய் பேசுவது.?

மேன்முறையீட்டுநீதிமன்றநீதியரசராக பந்துல கருணாரத்ன எதிர்வரும் காலப் பகுதியில் உயர்நீதிமன்ற நீதியரசராகப் பதவி உயர்வு பெறுவதற்கு வாய்ப்புள்ளது. இவர் உயர்நீதிமன்ற நீதியரசராக தெரிவுசெய்யப்பட்டதன்பின்னர்ஒருதலைப்பட்சமாகச் செயற்படுவார். ஆகவே, நாடாளுமன்றச் சிறப்புரிமை மற்றும் ஒழுக்கவியல் குழுவுக்கு அவரை அழைத்து உடன் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன்.

மேன்முறையீட்டுநீதிமன்றநீதியரசராக பந்துல கருணாரத்ன தொடர்பில் சபையில் நான் ஆற்றிய உரையின் முழு வடிவத்தை ஆவணப்படுத்தல் ஊடாக பிரதம நீதியரசருக்கும், நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கும் அனுப்பி வைக்குமாறு வலியுறுத்துகின்றேன்.

கிரிக்கெட் மோசடியுடன் தொடர்புடைய ஒருசிலர் ஜனாதிபதிக்குத் தவறான விடயங்களைக் குறிப்பிடுகின்றார்கள். உண்மை நோக்கத்துக்காக நாங்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கினோம். சூது சம்மியா அல்லது ரொஷான் ரணசிங்கவா என்பதை ஜனாதிபதி தீர்மானிக்க வேண்டும்.

கிரிக்கெட் மோசடியாளர்களுக்கும், போதைப்பொருள் வியாபாரிகளுக்கும் இடையில் வேறுபாடுகள் இல்லை. ஒருசில சட்டத்தரணிகள் வெட்கமில்லாமல் கிரிக்கெட் சபையின் ஊழல்வாதிகளுக்குத் துணைபோகின்றார்கள். கிரிக்கெட் சபையின் ஊழல், மோசடி தொடர்பில் குறிப்பிட ஒரு நாள் போதாது. தற்போதை கிரிக்கெட் சபைக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால் கிரிக்கெட்டுக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் தடைகளை ஏற்படுத்துவோம் என ஊழல்வாதிகள் அச்சுறுத்தல் விடுக்கின்றார்கள். இந்த அச்சுறுத்தலுக்கு அடிபணிவதா அல்லது கிரிக்கெட்டைப் பாதுகாப்பதா என்பதை 225 உறுப்பினர்களும் தீர்மானிக்க வேண்டும்." – என்றார்.

CENTRAL PARK
JA-ELA

# CENTRAL PARK JA-ELA

**15 ACRES LARGEST**
GATED DEVELOPMENT PROJECT IN SRI LANKA
**OVER 40+ AMENITIES**






## COMFORT ASSURED, SPACIOUS LAYOUTS & PREMIUM FACILITIES

KELSEY HOUSE - 3 BHK HOUSES
KELSEY VILLA - 3/4 BHK HOUSES
FAMILY VILLA - PRIVATE APARTMENTS
HARMONY PARK - HOUSING COMPLEX





24/2, Court Road, Weligampitiya, Ja Ela

Blue Ocean™ GROUP OF COMPANIES
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

3500+ UNITS
235+ PROJECTS
20+ CITIES

KELSEY HOMES
40 Years Housing Excellence

**Discover the Locations that Embraces the Ultimate Luxurious Living**

+94 777 546 546 +94 770 774 774

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka. www.blueocean.lk www.kelsey.lk


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
“ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்.”
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
VAN FOR RENT A/C
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230


Swami Vivekananda Cultural Centre,
High Comission of India, Colombo.
2nd
PRATHIBHA SANGAM
Competition
Categories of Competition
Indian Dance
Bharatanatyam
Kathak
Odissi
Hindusthani Music
Instrumental Music
Vocal
Carnatic Music
Instrumental Music
Vocal
Starting Date: 05.10.2023 (10.00 am IST)
Closing Date: 10.11.2023 (6.00 pm IST)
Competition Timelines
Winners to be announced in the month of November/ December 2023
For registration and guidelines
Awards & Prices
A Certificate | Cash Prizes
Cash prizes
for three winners in each genre
$500 $350 $250
Winners shall be invited to perform in India.
Swami Vivekananda Cultural Centre,
16/2, Gregory's Road, Colombo - 00700


Discover the Ultimate Investment &
Dynamic Destinations
which Redefines the Face of Luxurious Living
OUR ONGOING PROJECTS
No.05, 19th Lane Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.
Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES
40 Years Housing Excellence
+94 777 546 546
+94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

துறையைச் சார்ந்தோருக்கு - குறிப்பாக உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் போன்றவற்றில் நீதியரசர்களாக இருப்போருக்கு - அவர்களின் பொறுப்பையும், கடமையையும் சாட்டை அடியாக உறைக்க உணர்த்துவது போல அது அமைந்தது .

நீதியரசர்கள் என்றாலும் மக்கள் ஒப்புவித்த நீதித்துறை அதிகாரத்தை, மக்களின் சார்பிலான கடப்பாட்டில் அவர்கள் ஆற்றுகின்றார்கள், எனவே மக்களுக்குப் பொறுப்புக் கூட அவர்கள் கடமைப்பட்டவர்கள் என்பதை விலாவாரியாக அவர் விளக்கினார்.

கீழ்நிலை நீதிமன்றங்கள் ஒரு வழக்கில் தீர்ப்புக்கான காரணங்களை கூறவில்லை என்றால், அது ஒன்றே அத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு விசாரணைக்கும், மேன்முறையீட்டுத் தீர்ப்புக்கும் போதுமாகி விடுவதை சுமந்திரன் சுட்டிக்காட்டினார். கீழ்நிலை நீதிமன்றத்தின் தீர்ப்புகளை அந்த காரணத்துக்காகவே மாற்றும் மேனிலை நீதிமன்றங்களின் நீதியரசர்கள், தமது தீர்ப்புகளில் அதை செய்வதில்லை என்று அவர் விசனம் தெரிவித்தார்.

அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்பதா என்பதைப் பத்து நாள்களாகத் தொடர்ந்து விசாரணை செய்த உயர் நீதிமன்றத்தின் முழு ஆயம், காரணம் எதுவும் விவரிக்காமல், அந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்பதில்லை என்று ஒரு வரியில் தீர்ப்பு கூறுகின்றது. அப்படியானால் பத்து நாள்கள் என்ன விசாரித்தீர்கள்? அந்த முடிவுக்கு நீதிமன்றம் வந்தமைக்கான காரணத்தை அறியும் உரிமை மனுதாரருக்கு இல்லையா? தமது முடிவுக்குக் காரணம் கூறும் - பொறுப்புக் கூறும் - கடப்பாடு நீதியரசர்களுக்குக் கிடையாதா? - என்று கேட்டார் சுமந்திரன்.

நீதித்துறையும் பொறுப்புக் கூறலுக்குக் கடப்பாடு உடையது என்று சுட்டிக்காட்டினார் அவர். பிரதம நீதியரசர் பதவியில் இருந்தோர் எப்படி கீழ்த்தரமாகச் செயற்பட்டார்கள் என்பதை சில உதாரணங்களுடன் விவரித்த அவர், இத்தவறுகளைப் புரிந்த நீதித்துறையினர் தண்டிக்கப்படவே இல்லை, ஆனால் சாதாரண பிரஜைகள் மட்டும் நீதிமன்ற அவமதிப்பு என்ற பெயரில் தண்டிக்கப்பட வாய்ப்பளிப்பது எங்ஙனம் நியாயம் என்று கேள்வி எழுப்பினார்.

தீர்ப்புகள் நேர்மையான முறையில் விமர்சிக்கப்பட இடமளிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்திய அவர், அண்மையில் கொண்டுவரப்பட்ட சட்டங்கள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் முடிவுகள், வழிகாட்டல்கள், பொறுப்புக் கூறும் கடப்பாட்டில் அமையவில்லை என்பதையும் சுட்டினார்.

கிரிமினல் குற்றம் ஒன்றுக்கான விடயம் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்படுவதற்கு சட்டத்தில் கால அவகாசம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இருபது ஆண்டுகளுக்கு பின்னர் பழைய கிரிமினல் குற்றம் ஒன்றுக்காக ஒருவரைத் தண்டிக்கவோ அல்லது விசாரிக்கவோ முடியாது என்று சுட்டிய அவர், ஆனால் நீதிமன்ற அவமதிப்புக் குற்றங்கள் விடயத்தில் மூலச் சட்டத்தில் வழங்கப்பட்ட காலவரையறையை நீக்கியதன் மூலம், பெரும் தவறுக்கு உயர் நீதிமன்றம் வழி செய்திருப்பதாக விமர்சித்தார். முப்பது வருடத்துக்கு முன்னர் நிகழ்ந்த நீதிமன்ற அவமதிப்புக்கு, இப்போது விசாரித்துத் தண்டனை வழங்கவும் வழி செய்யும் விதத்தில் சட்டத்தை உயர்நீதிமன்ற மாற்ற வழி செய்திருப்பதை அவர் குறை கூறினார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளில் தண்டனை இதுதான் என்று சட்டத்தில் வரையறை செய்யப்படவில்லை. நீதிமன்றம் தனக்கு உசிதமான தண்டனையை வழங்கலாம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படி வரையறை செய்யப்படாமல் இருப்பது ஆபத்தானது என்பதை சுமந்திரன் சுட்டினார்.

தண்டனையை வரையறை செய்யும் விடயம் இப்போது சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலத்தில் இருந்தது. ஆனால் அதை நிறைவேற்றுவதானால் மக்களிடம் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அனுமதி பெற வேண்டும் என்று தீர்ப்பளித்ததன் மூலம், அந்த வரையறை செய்யும் வாய்ப்பை உயர் நீதிமன்றம் இல்லாமல் செய்து விட்டது. இன்றைய சூழலில் நீதிமன்றங்கள் தங்களுக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு விடயங்களை உணர்ச்சி நிலையில் அணுகக் கூடிய சூழலில், இவ்வாறு தண்டனை வரையறை செய்யப்படாவிட்டால், சில சமயங்களில் நீதிமன்ற அவமதிப்புக்காக அந்த நீதிமன்றம் தன்னிச்சைப்படி மரண தண்டனை கூட வழங்க முடியும் என்பதை விசனத்துடன் சுட்டிக்காட்டினார் சுமந்திரன்.

அவரது நேற்றைய பேச்சின் காணொலியை உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றின் முன்னாள், இந்நாள் நீதியரசர்களுக்கு ஒரு தடவை அனுப்பிப் பார்க்கவும் செவிமடுக்கவும் செய்தால் நல்லது என்பது எனது பரிந்துரை. யார் செய்வார்கள்?

## நாடாளுமன்றத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது என்று நாடாளுமன்றத்தின் பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன தெரிவித்தார்.

அதற்கமைய, விவாதம் தொடர்பான பிரேரணை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் முன்வைக்கப்படவுள்ளதுடன், அது ஆளும் கட்சியால் ஆமோதிக்கப்படவுள்ளது.

அதையடுத்து நாளை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்த இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள் மற்றும் 2023 ஆம் நிதியாண்டுக்கான 231.5 பில்லியன் ரூபா அனுமதியைப் பெறுவதற்கான 01 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீடு என்பன விவாதம் இன்றி அனுமதிக்கப்படவுள்ளன. இன்று ஒதுக்கப்பட்டிருந்த வாய்மூல விடைக்கான கேள்விகள் பிறிதொரு நாளுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை "ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் உட்பட அதிகாரிகளை நீக்குதல்" எனும் தலைப்பிலான பிரேரணை மீதான விவாதம் இடம்பெறவுள்ளது. பி.ப. 5.30 மணிக்கு குறித்த பிரேரணை மீதான வாக்கெடுப்பு இடம்பெறும் என்றும் பதில் செயலாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டார்.

இதற்கமைய இலங்கையில் கிரிக்கெட் விளையாட்டின் முன்னேற்றத்துக்குத் தற்போதைய ஊழல் நிறைந்த இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகளைக் கொண்ட சபையை உடனடியாக நீக்க வேண்டும், ஊழல் அற்ற கிரிக்கெட் நிர்வாகத்தை வெளிப்படையான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்காக கிரிக்கெட் நிர்வாகத்துக்குப் புதிய சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டும் என்றும் நாடாளுமன்றத்தால் கொண்டுவரப்படவுள்ள பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மின்சாரம் தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடமையாற்றி வந்த 14 வயது சிறுவன் மின்சாரம் தாக்கி நேற்று உயிரிழந்துள்ளார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மஹா ஜோதி மண்டலப் பெருவிழா இடம்பெற இருக்கின்ற நிலையில் அந்தக் கோயிலில் நிறம் பூசும் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில், பூசை உதவியாளரான 14 வயது சிறுவன் கோயிலுக்கு மேல் மாடிக்குச் சென்று மின் குமிழ்களைப் பொருத்திக் கொண்டிருக்கின்ற வேளையில் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த உதவி பூசாரியின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான விசாரணைகளை நிலாவெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மகன் விஷம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

உயிரிழந்த நபரின் இரண்டாவது மகன் நேற்றுமுன்தினம் விஷம் அருந்தியதால் அதிர்ச்சியில் தந்தை மயங்கியுள்ளார்.

அவர் உடனடியாக கோப்பாய் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

பின்னர் பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நேற்று மேற்கொண்டார்.

விஷம் அருந்திய மகன் உயிர் தப்பிய நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## விதியின் போக்கு எப்படியோ...?

பொலிஸ்மா அதிபர் நியமன விவகாரம் நேற்று நாடாளுமன்றத்தில் வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தி இருக்கின்றது.

தற்போதைய பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலம் நான்காவது தடவையாக ஜனாதிபதியினால் நீடிக்கப்பட்டுள்ளது.

முதல் இரு தடவைகளும் மூன்று, மூன்று மாதங்கள் நீடிப்பு வழங்கப்பட்டது. அச்சமயத்தில் ஜனாதிபதியின் பரிந்துரையை அரசமைப்புக் கவுன்ஸில் ஏற்று அங்கீகரித்தது.

ஆனால், அதற்குப் பின்னர் இரண்டு தடவைகள் மூன்று, மூன்று வாரங்களுக்கு அவருக்குப் பதவி நீடிப்பு ஜனாதிபதியினால் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு அரசமைப்பு கவுன்ஸில் அங்கீகாரம் வழங்கவில்லை.

அப்படி அரசமைப்பு கவுன்ஸிலின் அங்கீகாரம் இன்றி, ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட பதவி நீடிப்பு சட்டப்படி செல்லுபடியற்றது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நேற்று நாடாளுமன்றத்தில் கூறியிருக்கின்றார்.

"சட்டத்தின் அடிப்படையில் நாட்டில் தற்போது பொலிஸ்மா அதிபர் கிடையாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொலிஸ் மா அதிபர் நியமன விவகாரத்தில் அரசமைப்பை மீறியுள்ளார். ஆகவே அவருக்கு எதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணை (Impeachment) கொண்டு வர முடியும்." - என்றும் சுமந்திரன் கூறியுள்ளார்.

சுமந்திரன் கூறிய கருத்து உண்மை என்றாலும், அப்படி சட்டவிரோதமான முறையில் ஒருவரைப் பொலிஸ்மா அதிபர் பதவியில் அமர வைத்து, அரசின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் ஜனாதிபதியின் செயற்பாட்டுக்கு எதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகள் குறைவு.

அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

ஒன்று - அந்த முயற்சிக்கு ஆதரவாகக் குறைந்த பட்சம் நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவை பெற வேண்டும். அப்படி ஆதரவு இருந்தால்தான் அந்த விடயத்தை முன் நகர்த்த முடியும்.

அடுத்தது - தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் அடுத்த ஒக்டோபரில் முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய குற்ற விசாரணைப் பிரேரண நடவடிக்கைகளை முழுமையாக நிறைவு செய்ய முடியாது. அதற்குக் கால அவகாசம் போதாது.

ஆனால், ஜனாதிபதியின் இத்தகைய சட்ட மீறல் போக்குக்காக நீதிமன்றத்திற்குப் போக முடியும். அதற்கு சட்டத்தில் இடம் உண்டு. இன்றைய நிலையில் ஜனாதிபதி பதவியில் இருப்பவருக்கு எதிராக - அவர் ஜனாதிபதி என்ற முறையில் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக - நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்க முடியாவிட்டாலும், பொலிஸ்மா அதிபர் பதவியில் இருப்பவர் சட்டரீதியாக அப்பதவியில் இல்லை என்ற தீர்ப்பை உயர்நீதிமன்றத்திடம் இருந்து விரைந்து பெற வாய்ப்புகள் உண்டு.

அது மாத்திரமல்ல. இப்போது சட்டவிரோதமான முறையில் ஒருவரைப் பொலிஸ்மா அதிபர் பதவியில் இருத்தி, நாட்டை முறையற்ற விதத்தில் ஆட்சி செய்த நடவடிக்கைக்காக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிப் பதவியை விட்டு இறங்கிய பின்னர் அவர் மீது தாராளமாக - கடுமையான - சட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இப்போது படும் அவஸ்தையைப் புரியாமல் ரணில் காய் நகர்த்துகின்றார் போலும். சில சமயங்களில் தாம் எஞ்சிய வாழ்நாள் முழுவதுமே ஜனாதிபதியாக இருப்போம், தமக்கு எதிராக நீதிமன்ற அதிகாரம் செலுத்தப்படுவதற்கு வாய்ப்பே கிடையாது என்ற அதீத நம்பிக்கையில் ரணில் விக்கிரமசிங்க இப்படிக் காரியமாற்றக் கூடும்.

ஆனால், விதியின் போக்கை இப்போது முடிவு செய்து விட முடியாது என்பதுதான் உண்மை நிலைமையாகும்.

## இலங்கைக்குக் கடத்த இருந்த

# 300 கிலோ கஞ்சாப் பொதிகளுடன் 8 பேர் தமிழகத்தில் நேற்று சிக்கினர்

(ந.லோகதயாளன்)

இலங்கைக்குக் கடத்தும் நோக்குடன் கடற்கரைக்கு எடுத்து வரப்பட்ட கஞ்சாப் பொதிகள் தமிழகம் – நாகைபட்டினத்தில் தமிழகப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தில் இருந்து தமிழகம் ஊடாக இலங்கைக்குக் கடத்த முற்பட்ட 300 கிலோகிராம் கஞ்சாப் பொதிகளே தமிழகப் பொலிஸாரால் நேற்றுக் காலை கைப்பற்றப்பட்டுள்ளது.

கஞ்சாப் பொதிகளை எடுத்து வந்த இரு வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அதேவேளை, கஞ்சாப் பொதிகளை ஏற்றி வந்த சந்தேகநபர்கள் 8 பேர் தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2023

"மரங்களை நேசிக்காத எவரும் இறைவனை நேசிப்பவர்கள் அல்லர்."
- மூப்பர் அம்பிலோகியோஸ்
(கிரேக்க கிறிஸ்தவ மதகுரு)



## யாழ்ப்பாணத்தில் வீடுகள் உடைத்து

# 18 பவுண் நகைகள் திருடிய குற்றச்சாட்டில் மூவர் கைது!





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் வீடுகளை உடைத்து 18 பவுண் தங்க நகைகளைத் திருடிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரும், உடந்தையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவரும், நகைகளை வாங்கி உருக்கிய குற்றச்சாட்டில் ஆண் ஒருவரும் என மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து ஒரு தொகுதி தங்க நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மற்றொரு தொகுதி தங்க நகைகள் மன்னார் மற்றும் திருகோணமலை பகுதிகளில் வங்கிகளில் அடகு வைக்கப்பட்டுள்ளன என்றும், அவற்றை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் 5ஆம் திகதி கோப்பாய் பொலிஸ் பிரிவில் அதிகாலை வேளை ஆட்கள் இல்லாத நேரம் வீடு உடைத்து 5 பவுண் நகைகளைக் களவெடுத்தமை மற்றொரு வீட்டில் கடந்த ஏப்ரல் முதலாம் திகதி வீட்டில் ஆட்கள் அற்ற நிலையில் 13 பவுண் நகைகளைத் திருடியமை தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அவை தொடர்பில் உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்நிலையில், நகைகளைத் திருடிய குற்றச்சாட்டில் திருநெல்வேலியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞரும், உடந்தையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவரும், நகைகளை வாங்கி உருக்கிய குற்றச்சாட்டில் ஆண் ஒருவரும் என 3 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## நிலவிடுப்பு குறித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கலந்துரையாடல் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலக மேலதிக செயலாளர் எஸ்.இளங்கோவன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் வனவளத் திணைக்களத்தின் செயலாளர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோருடன் மேலதிக செயலாளரும் கலந்துகொண்டார். அத்துடன் வடக்கு, கிழக்கு மாவட்டங்களின் மாவட்ட அரச அதிபர்கள், மேலதிக அரச அதிபர்கள் உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

சூம் இணைய வழியாக இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில், வடக்கு, கிழக்கின் மாவட்டங்களில் மன்னார் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களின் விவரங்கள் ஓரளவு திரட்டப்பட்டு அடுத்த கட்ட நகர்வுக்குச் சென்ற போதும் மன்னாரில் முதல்கட்ட பணிகள்கூட இடம்பெறவில்லை என வனவளத் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டது. அதே வேளை, ஏனைய மாவட்டங்களில் கோரிய இடங்களில் அதிகமானவை உரிய திணைக்களங்களால் நேரில் பார்வையிடப்பட்ட நிலையில் குறிப்பிட்ட சில இடங்களை விடுவிக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

இணக்கம் தெரிவிக்காத இடங்கள் விடப்பட வேண்டிய தேவை இருப்பின் அதற்கான பிரத்தியேக காரணங்களுடன் உடன் மீள அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும், அந்த இடங்களும் அளவீடு செய்யப்பட வேண்டும் எனவும் வனவளத் திணைக்களத்தின் செயலாளரால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேநேரம் முல்லைத்தீவு மாவட்டத்திலேயே அதிக இடம் கோரப்பட்டது. அதில் இரு இடங்கள் மட்டுமே மீள ஆய்வு மேற்கொள்ள வேண்டியுள்ளதால் இனி அளவீட்டு உத்தியோகத்தருக்கு முல்லைத்தீவில் பணி இருக்காது எனவும், எனவே முல்லைத்தீவு அளவீட்டு உத்தியோகத்தரை மன்னாருக்கு வழங்கி உதவுமாறும் கலந்துரையாடலில் கோரப்பட்டது.

இதேநேரம் ஏனைய பணிகளையும் விரைவுபடுத்தும் வகையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் ஒப்புதலைப் பெறாத மாவட்டங்களும் அந்த விபரங்களை உடன் பெற்று அமைச்சுக்கு வழங்குமாறும் அறிவுறுத்தப்பட்டது.

## சட்ட ரீதியாக நாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று புதிய பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பில் நடைபெற்ற விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புதிய பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பில் கூற்றொன்றை முன்வைத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, "பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பில் ஜனாதிபதியால் மூன்றாவது தடவையாகவும் அதன் பின்னரும் அனுப்பப்பட்ட பரிந்துரைகள் எதுவும் அரசமைப்புப் பேரவையால் உறுதிப்படுத்தப்பட்டு நியமிக்கப்படவில்லை. இது அரசமைப்பு பேரவையின் சக உறுப்பினர்களுக்கும் தெரியும்.

பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பாக இரண்டு சந்தர்ப்பங்களில் தலா 3 மாதங்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்ட போதிலும், இரண்டாவது நியமனம் வழங்கப்படும் போது, அடுத்த நியமனம் நிரந்தர நியமனமாக இருக்க வேண்டும் என அரசமைப்பு பேரவை ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியது.

பொலிஸ்மா அதிபரை நியமிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது. எனினும், அதனை அங்கீகரிக்க அல்லது நிராகரிக்க அரசமைப்பு பேரவைக்கும் அதிகாரம் உள்ளது. அரசமைப்பின் ஏற்பாட்டு விதிகளை வியாக்கியானம் செய்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை." – என்றார்.

இதையடுத்து எழுந்த தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ, "பதவிக் காலம் முடிந்த பொலிஸ்மா அதிபருக்குத் தொடர்ந்தும் பதவி நீடிப்பு வழங்கப்படுகின்றது. எனினும் இதற்கு அரசமைப்பு பேரவை அனுமதி வழங்கவில்லை. அதனால் பொலிஸ்மா அதிபரின் பதவி நீடிப்பு சட்ட ரீதியானது அல்ல. எனவே, இது தொடர்பில் அரசு நாட்டு மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும்." – என்றார்.

இதற்குப் பதிலளித்த சபைக்குத் தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, "ஜனாதிபதியின் நியமனம் தொடர்பில் நாம் விவாதிக்க முடியாது" – என்றார்.

அப்போது மீண்டும் எழுந்த விமல் வீரவன்ஸ எம்.பி., "நீங்கள் ஜனாதிபதியின் பிரதிநிதி அல்ல. எனவே, நீங்கள் இது தொடர்பில் பதிலளிக்கத் தேவையில்லை. இங்கு பிரதமர் மற்றும் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் உள்ளார்கள். அவர்கள் பதிலளிக்க முடியும்" – என்றார். ஆனால், எவரும் பதிலளிக்கவில்லை.

இதன்போது எழுந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், "சட்டத்தின் அடிப்படையில் தற்போது நாட்டில் பொலிஸ்மா அதிபர் இல்லை. ஜனாதிபதி வேண்டுமென்றே அரசமைப்பை மீறி பதவி முடிந்த பொலிஸ்மா அதிபருக்குப் பதவி நீடிப்பை வழங்கி வருகின்றார். எனவே, அரசமைப்பை மீறிய குற்றச்சாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணை கொண்டு வரமுடியும்." – என்றார்.

# இஸ்ரேல் போருக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்தியா நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## - ஈரான் ஜனாதிபதி கோரிக்கை



இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக்கும் இடையில் தொலைபேசி வழியான கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது இந்தியா – ஈரான் உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும், இஸ்ரேல்–ஹமாஸ் போர் நிறுத்தம் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேற்கத்திய நாடுகளின் காலனி ஆதிக்கத்திற்கு எதிராக இந்தியா நடத்திய போராட்டங்களும், அணி சேரா நாடுகளை ஒருங்கிணைப்பதில் எடுத்த முயற்சிகளையும் ஈரான் நினைவு கூருகிறது எனவும் பலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் நடத்தும் போரை நிறுத்துவதற்கு இந்தியா முன்வரவேண்டும் என்றும் ஈரான் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன், பலஸ்தீன மக்களின் துன்பங்களை முடிவுக்கு கொண்டு வருவதற்கு எடுக்கப்படும் அனைத்து உலகளாவிய நடவடிக்கைக்கும் ஈரான் ஆதரவளிக்கும் என்றும் ஈரான் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

இதன்போது ஈரான் ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில், இஸ்ரேலின் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்தியா தனது ‘அனைத்து திறன்களையும்’ பயன்படுத்த வேண்டும்.

மேலும், உடனடி போர் நிறுத்தம், தடையை நீக்குதல் மற்றும் காசாவின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குதல் போன்ற உலகளாவிய கூட்டு முயற்சிகளை தெஹ்ரான் ஆதரிக்கிறது.

பாலஸ்தீன மக்களைக் கொலை செய்வது தொடர்வது உலகின் அனைத்து சுதந்திர நாடுகளையும் கோபத்தில் ஆழ்த்தியுள்ளது, மேலும் இந்தப் போர் பிராந்தியத்துக்கு அப்பாற்பட்ட விளைவுகளை ஏற்படுத்தும். ஒடுக்கப்பட்ட மற்றும் அப்பாவி பெண்கள் மற்றும் குழந்தைகள் கொல்லப்படுவது, மருத்துவமனைகள், பாடசாலைகள் , மசூதிகள் மற்றும் குடியிருப்பு பகுதிகள் மீதான தாக்குதல்கள் எந்தவொரு மனிதனின் பார்வையில் இருந்தும் கண்டனத்துக்குரியது. மேலும் அதை ஏற்றுக்கொள்ளவும் முடியாதது என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இஸ்ரேல்–பாலஸ்தீன விவகாரத்தில் இந்தியாவின் நீண்டகால நிலையான நிலைப்பாட்டை பிரதமர் மோடி மீண்டும் வலியுறுத்தினார்.

மேலும் போர் தீவிரமடைவதை தடுப்பது, தொடர்ந்து மனிதாபிமான உதவிகளை உறுதி செய்து, கலவரத்தால் பாதிக்கப்பட்ட காசாவில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை சீக்கிரமாக மீட்டெடுப்பதன் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இந்திய பாதுகாப்பு எல்லை பகுதியில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த திட்டம்



ஹமாஸ் தாக்குதலை முன்மாதிரியாகக் கொண்டு பாகிஸ்தானின் தீவிரவாத இயக்கங்கள் இந்திய எல்லைப் பகுதியில் புதிய தாக்குதல்களுக்குத் திட்டமிட்டிருப்பதாக உளவுத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த நிலையில் பொது மக்கள் கூட்டம் அதிகரித்துள்ள இடங்களிலும் எல்லைப் பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், ஹமாஸ் பாணியில் காஷ்மீரில் தாக்குதல் நடத்தப்படலாம் என்பதால் எல்லையில் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஷ்மீர் எல்லையில் ஊடுருவ 60 தீவிரவாதிகள் காத்திருகின்றனர் எனவும் அவர்கள் பதுங்கி இருக்கும் பகுதிகள் தொடர்பில் முழுமையான தகவல்கள் இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை என்றும் உளவுத் துறை அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# தெலுங்கானாவில் சுயமரியாதை மாநாட்டில் பிரதமர் மோடி உரை

தெலுங்கானாவில் எதிர்வரும் 30 ஆம் திகதி சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ளது. இதனை ஒட்டி, தெலங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் நடைபெற்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சுயமரியாதை மாநாட்டில் பிரதமர் மோடி கலந்து கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், காங்கிரஸ் மற்றும் பாரத ராஷ்ட்ரிய சமிதி கட்சியினர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை முதலமைச்சராக்கியதே இல்லை என்று குற்றம் சாடியுள்ளார்.

# இஸ்ரேல் - ஹமாஸ் போர் மேலும் தீவிரம்: முழு போர் நிறுத்தம் கோராத ஜி7 நாடுகள்!

இஸ்ரேல் – ஹமாஸ் இடையேயான போர் 33 ஆவது நாளை எட்டியுள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேல் படைகள் காசா நகரின் மையப்பகுதிக்குள் நுழைத்திருப்பதாக அந்த நாட்டு இரா ணுவம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, தற்காலிக போர் நிறுத்தம் மட்டுமே கோரியுள்ள ஜி7 கூட்டமைப்பு நாடுகள் முழுமையான போர் நிறுத்தம் தேவை என்பதை எங்கும் வலியுறுத்தவில்லை.

அதேநேரம், நேற்றிரவு காசா பகுதி முழுவதும் வான்வழித் தாக்குதலை தீவிரப்படுத்திய இஸ்ரேல், காசாவின் முக்கிய மருத்துவமனைகளான அல்-ஷிஃபா மற்றும் இந்தோனேசியன் மருத் துவமனைகள் மீதும் குண்டுவீசி தாக்கின என்று ஹமாஸ் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளனர்.

கான் யூனிஸ், நுசிராத் மற்றும் ஜபாலியா அகதிகள் முகாம்களும் இஸ்ரேலின் இந்த குண்டுவீச்சு தாக் குதலில் இருந்து தப்பவில்லை என தனது அறிக்கையில் ஹமாஸின் உள்துறை தெரிவித்துள்ளது.

மேலும், இது தொடர்பாக தெரி விக்கையில், குடியிருப்புகளும் தாக்கு தலில் சிக்கியதால் பொதுமக்கள் உயிரிழப்பு அதிகரித்துள்ளது.

அதேபோல், ரமல்லாவில் உள்ள பிர்செயிட் பல்கலைக்கழக வளா கத்தை சுற்றிவளைத்த இஸ்ரேல் இராணுவத் தினர், பல்கலைக்கழக சொத் துக்களை சேதப்படுத்தியது.

அத்துடன், 45 இற்கும் அதிகமான



பாலஸ்தீனர்களை கைது செய்துள்ளனர் என்று ஹமாஸ் தலைமையிலான உள்துறை தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஹமாஸ் தலைவர் களில் ஒருவரான மொஹ்சென் அபு ஜினா கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேல் பாதுகாப்புப் படை அறிவித்துள்ளது. மொஹ்சென், ஹமாஸின் உளவுத்துறை மற்றும் ஆயுதப் பிரிவின் தலைவராக செயல்பட்டார். இஸ்ரேல் போருக்கு எதிராக பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை தயாரித்த குழுவிலும் இருந்துள்ளார். அவரை நேற்று காலை கொலை செய்ததாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் படைகள் காசா நகரின் மையப்பகுதிக்குள் நுழைத்திருப்பதாக அந்நாட்டு இராணுவ அமைச்சர் யோவ் கேலன்ட் செய்தியாளர்கள் சந்திப்பில் உறுதிப்படுத்தியுள்ளார்.

செய்தியாளர் சந்திப்பில் பேசிய இஸ்ரேல் ராணுவ செய்தித் தொடர்பாளர், தரைவழியாக ஊடுருவியுள்ள இஸ்ரேல் இராணுவ படைகள் காசா நகரின் மையப்பகுதியை அடைந்துள்ளது. அங்கு, ஹமாஸ்களை சுற்றி வளைத்து இராணுவம் தனது தாக்குதலை தீவிரப் படுத்தியுள்ளது.

ஹமாஸ் குழு ஏற்படுத்தி வைத் திருக்கும் நீண்ட சுரங்கப்பாதை வலையமைப்பை தற்போது தாக்கத் தொடங்கியுள்ளோம். சுமார் நூறு கிலோமீற்றர் வரை நீண்டு செல்லும் சுரங்கப்பாதைகளை தகர்ப்பதற்காக இஸ்ரேஸ் இராணுவ பொறியாளர்கள் வெடிமருந்துக்களை பயன்படுத்தி வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, டோக்கியோவில் நடந்துவரும் ஜி7 கூட்டமைப்பு மாநாட்டில் கலந்துகொண்டுள்ள நாடுகள், இஸ்ரேல் – காசா போரில் இஸ்ரேலை ஆதரித் துள்ளனர். 'ஹமாஸை அடக்கும்விதமாக இஸ் ரேல் தற்காப்பு நடவடிக்கையாக போரை மேற்கொண்டுள்ளதாக' கூறி இஸ்ரேலுக்கு ஜி7 கூட்டமைப்பு நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

அதேவேளையில், காசாவில் பாதிக் கப்பட்டுள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ளும்வகையில் 'தற்காலிக போர் நிறுத்தம்' தேவை என்பதை வலியுறுத்தியுள்ளன.

அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, ஜப்பான் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் தற்காலிக போர் நிறுத்தம் வேண்டும் என்பதை டோக்கியோ கூட்டம் வாயிலாக இஸ்ரேலிடம் வலியுறுத்தினர். தற்காலிக போர் நிறுத்தம் மட்டுமே கோரியுள்ள ஜி7 கூட்டமைப்பு நாடுகள் முழுமையான போர் நிறுத்தம் தேவை என்பதை எங்கும் வலியுறுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கென்யா, சோமாலியாவில் வெள்ளப்பெருக்கு: 40 பேர் பலி; அதிகளவானோர் இடம்பெயர்வு

கென்யா மற்றும் சோமாலியாவில் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கி குறைந்தது 40 பேர் உயிரிழந்துள்ளனர்.

வெள்ளம் காரணமாக பல்லாயிரக் கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர். வீடுகள், வீதிகள் மற்றும் பாலங்கள் சேதமடைந்துள்ளன.

அத்துடன், வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அரசாங்கம் அவசர நிலை பிறப்பித்துள்ளதுடன் மீட்பு பணிகளை துரிதப்படுத்தி வரு கிறது.

சோமாலியாவில் கடந்த 4 ஆண்டு களாக கடும் வறட்சி நிலவியது. தற்போது அங்குள்ள ஜுபாலாந்து மாகாணத்தில் கனமழை பெய்தது.

ஜுபா மற்றும் ஷாபெல்லே ஆறுகளில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட வெள் ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு 25 பேர்



பலியாகியுள்ளனர்.

இந்த நிலையில், ஜுபா மற்றும் ஷ பெல்லே நதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் இருப்பதாகவும், ஜு பாவின் முழுப் பகுதியிலும் வசிக்கும் மக்களை வெளியேற்றுமாறும் மனி தாபிமான விவகாரங்களுக்கான ஒருங் கிணைப்பு அலுவலகம் எச்சரித்துள்ளது.

லுக் மாவட்டத்தில் வெள்ளத்தில் சிக்கியுள்ள சுமார் 2,400 குடியிருப் பாளர்களை அடைய அவசர மற்றும் மீட்புப் படையினர் முயற்ச்சித்து வருகின் றனர் என அந்த நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.



# வடக்கில் அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் கண் பரிசோதிக்கப்பட்டு இலவசமாகக் கண்ணாடிகள்

## தை முதல் நடைமுறைக்கு வரும் என்கிறார் கண் சிகிச்சை வைத்திய நிபுணர் மலரவன்



எதிர்வரும் ஜனவரி மாதம் வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் கண் பரிசோதிக்கப்பட்டு இலவசமாக கண்ணாடிகள் வழங்கப்படும் என கண் சிகிச்சை வைத்திய நிபுணர் மு.மலரவன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வட மாகாணத்தைப் பொறுத்தவரையில் அண்மையில் நாங்கள் இலங்கை வரலாற்றில் இரண்டாவது தடவையாக கண்ணியல் பிரிவு போதனை வைத்தியசாலையில் கூடுதலான வெண்பிறை சத்துரை சிகிச்சைகள் குறுகிய காலத்துக்குள் செய்திருக்கின்றோம்.

நாங்கள் தான் இலங்கை வரலாற்றில் முதல் முறையாக தேசிய வெசாக்கை முன்னிட்டு கோவிட் காலத்திலும் 1200 கற்றாக் சிகிச்சைகளை 10 நாள்களில் செய்துள்ளோம்.

இந்த முறை உலக சர்வதேச பார்வை தினத்தை முன்னிட்டு போதனை வைத்தியசாலையில் ஐந்து நாள்களில் – அதாவது ஒக்டோபர் 30 ஆம் திகதியில் இருந்து நவம்பர் 3 ஆம் திகதி வரை 1,050 பேருக்கு செய்திருக்கின்றோம். இது முற்று முழுதாக ஆனந்தா அழகா பவுண்டேஷன், மலேசிய தொண்டு நிறுவனத்தின் மூலதனத்தோடு, இலங்கையைத் தளமாகக் கொண்டு இயங்கும் மற்றுமொரு சர்வதேச தொண்டு நிறுவனமான அசிஸ்ராரார் பிரித்தானியாவை ஒருங்கிணைத்து, முற்றிலும் இலவசமாக – அதாவது ஒரு மாத காலத்துக்கான மருந்துகளும் இலவசமாக வழங்கி – தரமான முறையில் இந்த சிகிச்சைகளை மேற்கொண்டிருக்கின்றோம்.

அநுராதபுரம் மற்றும் வவுனியா மாவட்டங்களை அண்டிய விவசாயபுர கிராமங்களில் இருந்து 150 பேரும், வவுனியா மாவட்டத்தில் 350 பேரும், மன்னார் மற்றும் முல்லைதீவு மாவட்டங்களில் இருந்து தலா 100 பேரும், யாழ் மாவட்டத்தில் 350பேருக்கும் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடமாகணத்தை பொறுத்தவரையில் ஆளணி மிகவும் குறைவாக இருக்கின்றது என்பது உங்களுக்குத் தெரியும். குறைந்த ஆளணி வளத்துடன் எங்களுக்கு இருக்கும் இடர்பாடுகளை சரியான முறையில் திட்டமிட்டுச் சமாளித்து, பல்வேறு தரப்பினரின் உதவியுடன் இதனை நாங்கள் நிறைவாகச் செய்திருக்கின்றோம்.

இரத்தினபுர வைத்தியசாலையின் கண் வைத்திய குழாம், கொத்தலாவல பல்கலைக்கழக வைத்திய குழாம், வவுனியா வைத்தியசாலையின் கண் வைத்திய பிரிவு, கண் வைத்திய நிபுணர்கள் உதவியுடன் இந்த கண் சத்திர சிகிச்சைச் செயற்பாடு வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டு இருக்கின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் பார்வையில்லாமல் இருப்பவர்களில் 70 வீதமானோருக்கு இருக்கின்ற பிரச்சினை வெண்புரை. இந்த சிகிச்சையை சாதாரணமாக வருடத்திற்கு நாங்கள் 3,000 தொடக்கம் 5,000 பேருக்குச் சாதாரணமாக செய்து கொண்டு வந்துள்ளோம். கொவிட் காலம், அத்தோடு பொருளாதாரம் நெருக்கடி உள்ளிட்ட வேறுபட்ட காரணங்களினால் இலவசமாக செய்வது இல்லாமல் போய்விட்டது.

நாங்கள் நிலையான அபிவிருத்தி அடைய வேண்டுமென்றால் இந்தக் கண் சுகாதாரம், கண்பார்வை சிறப்பாக இருக்க வேண்டும். இது ஐக்கிய நாடுகள் சபையிலேயே 2021 ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டு அந்த வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. 'காலநிலை மாற்றமும் கண்ணும்' என்கின்ற ஒரு கருத்துப் பொருள். மற்றது – இந்த நிலையான அபிவிருத்தி திட்டம்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிவுறுத்தல் பிரகாரம் இந்த வருடத்தில் இருந்து இன்னும் மூன்று வருடங்கள் இலவசமாக 10 ஆயிரத்துக்கு மேல் இவற்றைச் செய்வதற்கு யோசனை செய்து இருக்கின்றோம்.

இந்த நடைமுறையின் மூலம் வடமாகாணத்தில் இருக்கும் சகல மாவட்டங்களும் அந்தந்தக் கிராமிய வைத்தியசாலைகள் ஊடாக இதற்கான நபர்களை தெரிவு செய்கின்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இதனால் மக்கள் பயப்படத் தேவையில்லை. ஒரு வருடத்துக்குள் இதற்காக காத்திருப்பவர்கள் அனைவருக்கும் இந்த சத்திர சிகிச்சையை மேற்கொள்ள கூடியதாக இருக்கும்.

கண்பார்வை குறைவு (கண்ணாடி அணிதல்) காரணத்திற்காக ஆனந்தா பவுண்டேஷன்தங்கள் மூலதனத்தை இங்கு செலவிடுவதற்கு விரும்பி இருக்கின்றார்கள். தை மாதம் இதற்கான நிகழ்ச்சி திட்டங்கள் ஆரம்பிக்கப்படும். இதன் மூலம் வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் மாகாண சுகாதார அமைச்சின் ஊடாக முதலாம் தரத்தில் இருந்து 12 ஆம் தரம் வரையான மாணவர்களுக்கு கண் பரிசோதிக்கப்பட்டு இலவசமாக கண்ணாடிகள் வழங்கப்படும்.

மூன்றாவது நிகழ்சித் திட்டமாக மந்த பார்வை அல்லது பார்வை இல்லாதவர்களுக்கான சிறப்பு பயிற்சிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. – எனத் தெரிவித்துள்ளார்.

# அமைதி வழியில் போராடிய யாழ். பல்கலை மாணவரை கைது செய்தமைக்கு பல்கலை ஆசிரியர்கள் கண்டனம்

கால்நடை வளர்க்கும் மக்களின் மேய்ச்சல் தரை மீதான உரித்துக்காகவும், ஜனநாயகத்திற்காகவும் அமைதி வழியில் போராடிய பல்கலைக்கழக மாணவர்களைப் பொலிஸார் கைது செய்தமைக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை போராட்டம் தொடர்பான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைகள் காலங்காலமாக அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களினால் தமது கால்நடைகளை வளர்ப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. அண்மைய வருடங்களில், இந்தப் பிரதேசங்களில் இலங்கை அரசினால் சட்ட விரோதமான முறையில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். இந்தக் குடியேற்றங்களின் காரணமாக மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைப் பிரதேசங்களினைத் தமிழ் கால்நடை வளர்ப்பாளர்கள் பயன்படுத்துவது தடைப்பட்டிருக்கிறது. மேய்ச்சல் தரையைப் பயன்படுத்தும் தமிழ் மக்கள் மீது வன்முறைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் மேய்ச்சலுக்கு விடப்பட்ட அவர்களின் கால்நடைகளின் மீதும் வன்முறை பிரயோகிக்கப்படுகின்றது. கால்நடை வளர்ப்பாளர்களுக்கு மேய்ச்சல் தரை மீது இதுவரை இருந்த உரித்து அகற்றப்பட்டமை அவர்களின் பொருளதாரத்தின் மீதும், வாழ்வாதாரத்தின் மீதும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது. அண்மையில் இந்தப் பகுதியில் ஒரு புத்தர் சிலையும் நாட்டப்பட்டது. இந்த உரிமை மீறல் தொடர்பிலே பாதிக்கப்பட்ட மக்களும், அவர்களது ஆதரவாளர்களும் பல மாதங்களாக அமைதி வழியிலே போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அத்துமீறல் செயன்முறையையும், வன்முறையையும் கண்டிக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தையும் கிழக்குப் பல்கலைக்கழகத்தையும் சேர்ந்த தமிழ் மாணவர்கள் ஓர் அமைதிப் போராட்டத்திலே கடந்த நவம்பர் மாதம் 5ஆம் திகதியன்று இந்தப் பிரதேசத்திலே ஈடுபட்டனர்.

சட்டவிரோதமாக ஒன்று கூடினர் என்ற தோரணையிலே, இந்தப் போராட்டத்திலே ஈடுபட்ட மாணவர்களிலே பலர் சந்திவெளிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அமைதி வழியில், கால்நடை வளர்க்கும் மக்களின் மேய்ச்சல் தரை மீதான உரித்துக்காகவும், ஜனநாயகத்திற்காகவும் போராடிய பல்கலைக்கழக மாணவர்களைப் பொலிஸார் கைது செய்தமையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. மாணவர்களின் ஜனநாயக உரிமையின் மீது மேற்கொள்ளப்பட்ட மீறலாகவே இந்தக் கைதுகளை நாம் பார்க்கிறோம். வடக்குக் கிழக்கிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடும் மக்களையும் மாணவர்களையும் கைது செய்யும் போக்குத் தொடர்வதை நாம் இங்கு சுட்டிக்காட்டுகிறோம்.

மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் நிலங்களின் மீதான ஆக்கிரமிப்பை நாட்டின் வடக்குக் கிழக்கிலே பல தசாப்தங்களாக இலங்கை அரசினால் மேற்கொள்ளப்படும் சிங்கள பௌத்தமயமாக்கலின் ஒரு வடிவமாகவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கருதுகிறது. வடக்குக் கிழக்குப் பகுதிகளிலே வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் அரசியல் மற்றும் பொருளாதார இருப்புக்கு இந்த ஆதிக்கம் மிக்க சிங்கள பௌத்த மயமாக்கல் செயன் முறை ஓர் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இராணுவத்தின் உதவியுடனும், தீவிரத்தன்மை மிக்க பௌத்த மத குருக்களின் ஆதரவுடனும், இனவாதத் தைக் கையில் எடுத்துள்ள சிங்கள அரசியல்வாதிகளின் அனுசரணையுடனும் இந்தச் செயன் முறை வடக்குக் கிழக்கிலே தொடர்ந்த வண்ணம் உள் ளது. இதன் காரணமாக இனங்களுக்கு இடையிலே பதற்றமும், வெறுப்புமே உருவாகி வருகிறது.

மயிலத்தமடு, மாதவனைப் பிரதேசத்திலே ஜனநாயகப் போராட்டத்திலே ஈடுபட்ட மாணவர்களின் கைதைக் கண்டிக்கும் அதேவேளை, தமது உரிமைகளுக்காகப் போராடும் கால்நடை வளர்ப்பாளர்களின் போராட்டத்துக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தனது முழுமையான ஆதரவை வெளியிடுகிறது. இந்தப் பிரதேசத்தில் சட்டவிரோதமாகக் குடியேற்றப்பட்டவர்கள் அகற்றப்பட்டு கால்நடை வளர்ப்பாளர்களுக்கு இந்த மேய்ச்சல் தரை மீது இருக்கும் உரித்து உறுதி செய்யப்பட வேண்டும் எனவும் அரசை எமது ஆசிரியர் சங்கம் கோருகிறது. மயிலத்தமடு, மாதவனை உள்ளடங்கலாக வடக்குக் கிழக்கிலே இடம்பெறும் அனைத்து சிங்கள பௌத்தமயமாக்கல் செயன் முறைகளும் உடனடியாக நிறுத்தப்பட்டு அவற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும் நாம் கோருகிறோம். இந்த ஜனநாயக மீறல்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் படி நாம் நாட்டின் அனைத்து முற்போக்கு சக்திகளையும் இன, மத, பிராந்திய பேதமின்றி ஒன்றுபடும்படி கோருகிறோம் – என்றுள்ளது.





# பொத்துவில் ஆஸ்பத்திரியில் இரத்ததானம் வழங்கல்

(எம். எப். நவாஸ்)

பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் ஹுதா இரத்ததான அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்த தானம் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கி பொறுப்பு வைத்திய அதிகாரி, தாதிய உத்தியோகத்தர்கள், சுகாதார உதவியாளர்கள் மற்றும் அமைப்பின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# சுவஸ்திகாவை பேச அனுமதியுங்கள் பல்கலை ஆசிரியர்கள் வலியுறுத்தல்



சட்டத்தரணி சுவாஸ்திகா அருளிங்கம் மீளவும் அழைக்கப்பட்டு சட்டத்துறையிலே தனது உரையை வழங்குவதற்குரிய சந்தர்ப்பத்தை உருவாக்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், ஆசிரியர்கள், பல்கலைக்கழக நிருவாகம் ஆகியன இணைந்து உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சட்டத்தரணி சுவாஸ்திகா அருளிங்கத்தின் உரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலே கடந்த 31-10-2023 அன்று நிறுத்தப்பட்டமை தொடர்பிலான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஒக்டோபர் 31ஆம் திகதியன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி ஒன்றிலே கலந்து கொண்டு சட்டத்தரணி சுவாஸ்திகா அருளிங்கம் 'நெருக்கடியான காலத்தில் நீதித்துறையின் சுதந்திரம்' என்ற தலையங்கத்திலே உரையாற்ற இருந்தார். இந்த உரையாடல் இறுதி நேரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களில் ஒரு பிரிவினரின் நெருக்குதல் காரணமாகக் கைவிடப்பட்டது. இதற்கு மாணவர்களினால் சொல்லப்பட்ட காரணம் சட்டத்தரணி சுவாஸ்திகா அருளிங்கம் தென்னிலங்கையில் ஒரு நிகழ்ச்சியிலே பேசும் போது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை 'பாசிஸ அமைப்பு' என விவரித்தமையே ஆகும். ஒருவர் வெளியிட்ட தனிப்பட அரசியற் கருத்தின் அடிப்படையில் அவரைப் பல்கலைக்கழகத்திலே பேச அனுமதிக்கக் கூடாது எனப் பல்கலைக் கழக மாணவர்கள் நிருவாகத்துக்கு நெருக்குவாரம் கொடுத்தமை மிகவும் தவறான ஒரு செயல் என்பதை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இந்த அறிக்கையில் பதிவிடுகிறது.

மாணவர்களின் நெருக்குவாரத்துக்குப் பல்கலைக்கழக நிருவாகம் பணிந்து சென்றமையும் ஒரு தவறான செயலாகும். எதிர்காலத்தில் இவ்வாறான செயல்கள் இடம்பெறாது இருப்பதை மாணவர்களும், நிருவாகமும் உறுதி செய்வது அவசியம்.

பல்கலைக்கழகம் என்பது அறிவுசார் கருத்துப் பரிமாற்றங்களுக்குரிய ஒரு களம். வெவ்வேறு பட்ட அரசியல், பொருளாதார நிலைப்பாடுகளையும், கருத்துக்களையும் எந்தத் தடைகளும் இல்லாத வகையிலே உரையாடுவதற்கும், விவாதிப்பதற்கும் உரிய வெளியும், சுதந்திரமும் பல்கலைக்கழகத்தினுள் இருப்பது பல்கலைக்கழகத்தின் அறிவு சார் செயன்முறைகளுக்கு மிகவும் அவசியம். இலங்கை அரசினதும், அதனது இராணுவக் கட்டமைப்பினதும் கடுமையான கண்காணிப்புக்கும், கட்டுப்படுத்தல்களுக்கும் உள்ளாகி இருக்கும் எமது பல்கலைக் கழகத்தில், மாணவர்கள் தமது அரசியற் கருத்துக்களை சுயாதீனமாக முன் வைப்பதற்கும், நினைவேந்தற் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும், போராட்டங்களிலே ஈடுபடு வதற்கும் எதிராகப் பல தடைகள் ஏற்படுத்தப்படுவதை நாம் அறிவோம். இதன் மிக அண்மைய வடிவத்தை இந்த வாரம் மயிலத்தமடு மேய்ச்சல் தரை விவகாரத்திலே ஜனநாயக ரீதியாகப் போராடிய எமது பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்ட சம்பவத்திலே நாம் கண்டோம். அரசினாலும், இராணுவத்தினாலும் அச்சுறுத்தலையும், கட்டுப்படுத்தலையும் எதிர்நோக்கும் எமது பல்கலைக்கழக மாணவர் சமூகத்தைச் சேர்ந்த ஒரு பிரிவினரே, சுவாஸ்திகா அருளிங்கம் பங்கேற்க இருந்த நிகழ்வு தொடர்பிலே ஒரு கட்டுப்படுத்தற் செயன்முறையில் ஈடுபட்டமை எமக்கு மிகுந்த ஏமாற்றத்தையும், நம்பிக்கையீனத்தையும், கவலையெயும் அளிக்கிறது. இது ஒரு தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்திவிடுமோ என நாம் அச்சமடைகிறோம்.

பல்கலைக்கழகத்தினுள் கல்விச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதும், கருத்துப் பரிமாறல்களுக்கான சந்தர்ப்பங்களை அமைத்துக் கொடுப்பதும், மாற்றுக் கருத்துக்களுக்கான இடத்தை வழங்குவதும் பல்கலைக்கழகத்திலே கற்கும் மாணவர்கள், அங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள், பல்கலைக்கழகத்தை இயக்கும் நிருவாகிகள் ஆகிய அனைவரினதும் கூட்டுப் பொறுப்பு. அந்தப் பொறுப்பிலே இருந்து நாம் ஒரு போதும் பின்வாங்கக் கூடாது. பல்கலைக்கழகத்தின் கல்விச் சுதந்திரம் தொடர்பிலே இந்தத் தரப்புக்களிலே ஒரு தரப்பு மற்றைய தரப்புக்கு எந்த விதமான அழுத்தங்களையும் கொடுக்கக் கூடாது. அதே போல பல்கலைக்கழகத்துக்கு வெளியில் இருந்து வரும் ஒடுக்குமுறைகளை நாம் இணைந்து எதிர்கொள்ள வேண்டும். எமது அரசியல் நிலைப்பாடுகளுக்கு அப்பால் கல்விச் சுதந்திரம் தொடர்பிலே இவ்வாறு கூட்டுணர்வுடனும், கூட்டுப் பொறுப்புடனும் நாம் செயற்படுவதன் மூலமாகவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் கருத்து வெளியீட்டுச் சுதந்திரத்தைப் பாதிக்கும் எல்லா அச்சுறுத்தல்களையும் எம்மால் முறியடிக்க முடியும்.

சட்டத்தரணி சுவாஸ்திகா அருளிங்கம் மீளவும் அழைக்கப்பட்டு சட்டத்துறையிலே தனது உரையை வழங்குவதற்குரிய சந்தர்ப்பத்தை உருவாக்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், ஆசிரியர்கள், பல்கலைக் கழக நிருவாகம் ஆகியன இணைந்து உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பல்கலைக்கழகத்தினுள் கருத்துச் சுதந்திரம், கல்விச் சுதந்திரம், மாற்றுக் கருத்துக்களுக்கான இடம் என்பவற்றைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவது தொடர்பாக மாணவர்களுடனும், பல்கலைக்கழகத்தின் மாணவர் அமைப்புக்களுடனும் உரை யாடுவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் முடிவெடுத்துள்ளது. இது தொடர்பான செயற்பாடுகளில் நாம் விரைவில் ஈடுபடுவோம் - என்றுள்ளது.

# மீளப் பெறமுடியாத அதிகாரப் பகிர்வுடன் சமஷ்டி முறைத் தீர்வே நிம்மதியாக வாழ வழி

## வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் பிரமுகர் லவகுசராசா வலியுறுத்து

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு – கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு கிடைக்கப் பெறும் பட்சத்திலேயே வடக்கு – கிழக்கு வாழ் தமிழ் மக்கள் நிம்மதியாகவும் சுயமாகவும் தமக்கான அடையாளத்துடனும் வாழ முடியும் என வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு ஒருங்கிணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா தெரிவித்தார்.

இலங்கையில் வடக்கு கிழக்கு தமிழரின் இணைப்பாட்சி(சமஷ்டி) கோரிக்கையின் தோற்றம் தொடர்பான கண்காட்சி மற்றும் வரலாற்றுத் தெளிவூட்டல் நிகழ்ச்சியில் நேற்று உரையாற்றிய போதே வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு ஒருங்கிணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா தெரிவித்தார்.

அவர் ஆற்றிய உரையின் வருமாறு:-

எமது வடக்கு – கிழக்கு மக்கள் கடந்த கால காலனித்துவக் காலத்தில் இருந்து இன்றைய சிங்கள பேரினவாத அரசின் ஆட்சிக் காலம் வரை இன ஒடுக்குமுறைக்கும் அடக்கு முறைக்கும் காலம் காலமாக முகம்கொடுத்து வரும் ஓர் இனமாக நாம் இன்று தள்ளப்பட்டிருக்கின்றோம்.

இவ்வாறானதொரு இன ஒடுக்கு முறைக்கு காலம் காலமாக முகம் கொடுத்துவரும் வடக்கு – கிழக்கு மக்களுக்கான கௌரவமான அரசியல் தீர்வு வேண்டிய எமது 100 நாள் செயல் முனைவின் இறுதி நாளான 2022ம் ஆண்டு நவம்பர் மாதம் 08ம் திகதி அன்று வடக்கு – கிழக்கு மக்களுக்கான அரசியல் தீர்வாக 'ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு – கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு வேண்டும்' எனும் மக்கள் பிரகடனம் வடக்கு – கிழக்கு மாகாணங்களிலுள்ள 08 மாவட்டங்களிலும் வெளியிடப்பட்டது.

அந்த வகையில் இப்பிரகடனம் வெளியிடப்பட்டு ஓராவது ஆண்டு பூர்த்தியான இன்றைய தினம் வடக்கு கிழக்கு மக்கள் ஒன்றிணைந்து 'இலங்கையின் வடக்கு கிழக்குத் தமிழரின் இணைப்பாட்சி(சமஷ்டி) கோரிக்கையின் தோற்றம்' எனும் வரலாற்றுத் தெளிவூட்டலை இங்கு அமைக்கப்பட்டிருக்கும் கூடாரங்களில் வைக்கப்பட்டிருக்கும் அரசியல் தீர்வு தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகள், உடன்படிக்கைகள், எமது வடக்கு கிழக்கு மக்கள் இன்றுவரைக்கும் எதிர்கொண்டு வரும் உரிமைசார் பிரச்சினைகள் உள்ளடங்கிய கண்காட்சிகள் ஊடாக இலங்கை தேசத்திற்கும் சர்வதேசத்திற்கும் தெளிவுபடுத்துகின்றோம்.

குறிப்பாக இலங்கை தீவில், 1948ம் ஆண்டிற்குப் பின்னர் இன்று வரைக்கும்



இலங்கைச் சிங்களப் பேரினவாத அரசின் – சிங்களப் பேரினவாதத்தின் – இனவாத அடக்கு முறைகளுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் உள்ளான தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு வேண்டிய போராட்டங்கள் மற்றும் சந்திப்புக்களை மேற்கொண்டமையுடன் – குறிப்பாக அரசியில் தீர்வு தொடர்பான ஒப்பந்தங்களையும் பேச்சுவார்த்தைகளையும் தமிழ் தலைவர்கள் காலனித்துவக் காலங்களிலும் அதற்குப் பின்னராக இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசின் தலைவர்களுடனும் – மேற்கொண்டிருந்தனர். குறிப்பாக செல்வா – பண்டா ஒப்பந்தம், செல்வா – டட்லி ஒப்பந்தம், இலங்கை – இந்திய ஒப்பந்தம், திம்புப் பிரகடனம் மற்றும் ஒஸ்லோ பேச்சுவார்த்தை என்பனவற்றை இங்கு குறிப்பிட முடியும்.

ஆனால் மேற்படி அரசியில் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகள் மற்றும் ஒப்பந்தங்கள் அனைத்தும் குறிப்பாக சிங்கள தலைவர்களால் நிராகரிக்கப்பட்டு நாம் ஏமாற்றப்பட்ட வரலாறுகளே அதிகமாகும்.

தமிழ் மக்கள் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வரலாற்றுக்கு முந்தைய காலம்தொட்டு பாரம்பரியமாக தமக்கேயான தனித்துவமான அடையாளத்துடன் வாழ்ந்து வந்தனர்.

இப்பிராந்தியத்தில் எண்ணிக்கைப் பெரும்பான்மையினரான தமிழ் மக்களுடன் எண்ணிக்கைச் சிறுபான்மையினரான தமிழ்பேசும் முஸ்லிம் மக்களும் வாழ்ந்து வருகின்றனர். ஆட்சிக்கு வந்த சிங்களப் பெரும்பான்மை அரசுகள் தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட முறையில் மேற்கொண்டுவந்த இனவாத அடிப்படையிலான அரசியல், மொழி, பொருளாதார, சமூக ரீதியான அடக்கு முறைகள் மற்றும் வன்முறைகளின் காரணமாகவே வடக்கு – கிழக்கு வாழ் மக்களுக்கு ஒருங்கிணைந்த வடக்கு – கிழக்கு மாகாணத்துள் மாகாண முறைமையிலான தீர்வு வழங்கப்பட வேண்டும், தமிழ் மொழியும் அரச கரும மொழியாக அரசமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என 13 ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. எனினும், 2006 இல் ஒருங்கிணைந்த வடக்கு –,கிழக்கு மாகாண அலகு பிரிக்கப்பட்டு வடக்கும் கிழக்கும் தனித்தனி மாகாணங்களாக்கப்பட்டன.

குறிப்பாக 1987இல் மேற்கொள்ளப்பட்ட இந்திய – இலங்கை உடன்படிக்கை மூலமான 13 ஆவது திருத்தச்சட்டம் உருவாக்கப்பட்டு இன்றுடன் 36 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. இந்தக் கால இடைவெளியில் இலங்கை அரசினால் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டமையுடன் தமிழர்கள் மீது போர்க்குற்றங்கள் புரியப்பட்டன. தொடர் இடப்பெயர்வு மற்றும் பல வருடகால அகதிமுகாம் வாழ்வை தமிழர்க அனுபவித்தனர். போரினால் இருப்பிடங்களும், சொத்துக்களும், வாழ்வாதாரங்களும் முற்றாக அழிக்கப்பட்டன. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இராணுவமயமாக்கம், திட்டமிட்ட முறையிலான நில அபகரிப்பு, தமிழ் மக்களின் மத – கலாச்சார அடையாளங்கள் அழிக்கப்பட்டு, சிங்களக் காலனித்துவக் குடியேற்றங்கள் அதிகரித்து வருகின்ற நிலை தொடருகின்றது அத்துடன் மனித உரிமை மீறல்கள் காரணமாகபாரிய அச்சுறுத்தல்களையும் இன்று வரையில் தமிழ் மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

மேற்படி இன அடக்கு முறைகளுக்கும், ஒடுக்கு முறைகளுக்கும் உள்ளாகி இருக்கும் எமது வடக்கு, கிழக்கு மக்கள் தனியான தேசியம்,தாயகம் மற்றும் சுயநிர்ணய உரிமையுடனும் வாழக்கூடிய வகையிலான 'ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு' வேண்டும். அத்தகைய அரசியல் தீர்வு கிடைக்கப் பெறும் பட்சத்திலேயே வடக்கு , கிழக்கு வாழ் தமிழ் மக்கள் நிம்மதியாகவும் சுயமாகவும் தமக்கான அடையாளத்துடனும் வாழ முடியும் என்பதில் ஐயமில்லை.

எனவே காலம் காலமாக சிங்கள பேரினவாதத்தின் இன ஒடுக்குமுறைக்கும் அடக்கு முறைக்கும் உள்ளாகி வரும் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கான மேற்படி அரசியல் தீர்வு தொடர்பான விடயத்தில் இந்திய அரசு உட்பட சர்வதேச சமூகங்களும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் மையக் குழு நாடுகளும் கரிசனை செலுத்த வேண்டும் என விநயமாக வேண்டி நிற்கின்றோம் – என்றார்.





# மருதனார்மடம் – உரும்பிராய் இடையே நேற்று டிப்பர் – ஹன்ரர் மோதி விபத்து

யாழ்ப்பாணம் மருதனார்மடம் – உரும்பிராய் இடையே டிப்பரும் ஹன்ரர் ரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகின.

நேற்று மதியம் மருதனார்மடத்தில் இருந்து உரும்பிராய் நோக்கிப் பயணித்த டிப்பரும் உரும்பிராய் சந்தியில இருந்து மருதனார்மடம் நோக்கிப் பயணித்த ஹன்ரர் ரக வாகனமுமே விபத்துக்குள்ளாகின.

இதனால் அப்பகுதியில் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

டிப்பர் மற்றும் ஹன்ரர் வாகனத்தில் பயணித்த சிலர் காயமடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை பிரதம நிறைவேற்று அதிகாரி பதவி நீக்கம்

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியான வைத்தியர் விஜித் குணசேகர பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக, அவர் பதவி நீக்கப்பட்டுள்ளார் என சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக்க ஸ்ரீ சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தலைவர் மற்றும் பிரதம அதிகாரி உள்ளிட்ட தரப்பினர்,




தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்தனர் என அண்மைக்காலமாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

இதன்படி, அண்மையில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தலைவர் நீக்கப்பட்டு, புதிய தலைவராக வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம நியமிக்கப்பட்டார்.

அதன் பின்னரும் பிரதம நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றிய விஜித் குணசேகர, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் முக்கியமான தகவல்கள் அடங்கிய பல ஆவணங்களை அழித்துள்ளார் என சுகாதார தொழிற்சங்கங்கள் குற்றம் சுமத்தின.

இது தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அஸ்வெசும திட்டத்தை தொடர்வதற்கு இணக்கம்

## பிரதேச செயலாளர்கள் சங்கம் வழங்கியது

அஸ்வெசும நலன்புரி திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்வதற்கான ஆதரவை வழங்குவதற்கு இலங்கை பிரதேச செயலாளர்கள் சங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

அஸ்வெசும நலன்புரி திட்டம் தொடர்பில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இணக்கப்பாடு எட்டப் பட்டது என இலங்கை பிரதேச செயலாளர்கள் சங்கத்தின் செயலாளர் பிரதீப் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அஸ்வெசும திட்டத்தை நேர்த்தியாக முன்னெடுத்துச் செல்வதற்கு கிராம மட்டத்தில் அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள், பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட நான்கு பிரிவுகளின் கீழ் நலன்புரி திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும் முதியோர் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கும் வழமை போன்று கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# கொழும்பு துறைமுகத்தின் அபிவிருத்திக்காக அமெரிக்கா 553 மில்லியன் டொலர் முதலீடு

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கு 553 மில்லியன் அமெரிக்க டொலர்களை அமெரிக்கா முதலீடு செய்யவுள்ளது.

இலங்கை வந்துள்ள அமெரிக்கா வின் சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்கொட் நேதன் இதனை அறிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையின் அபிவிருத்தி மற்றும் நல்வாழ்வுக்கான அமெரிக்காவின் அர்ப்பணிப்பை இது காட்டுவதாக தூதுவர் ஜூலி சங் தெரிவித் துள்ளார்.

அமெரிக்காவின் சர்வதேச அபிவி ருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்கொட் நேத னுடனான சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் ஜனாதி பதி யின் பணிக்குழாம் பிரதானி சாகல ரத் நாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்படி, இந்தியாவின் அதானி குழுமத்தின் துறைமுகப் பிரிவினால் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி செயற்பாடுகளில் ஆழ்கடல் கப்பல் கொள்கலன் முனைய நிர்மா ணப் பணிகளுக்காக இந்த நிதி வழங் கப்படுவதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது.





# இந்த மாதத்தின் முதல் 5 நாள்களில் 22,202 சுற்றுலாப் பயணிகள் வருகை



இந்த மாதத்தின் முதல் 5 நாள்களில் 22 ஆயிரத்து 202 வெளிநாட்டு சுற்று லாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள் ளனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள வாராந்த அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதன்படி இந்த வருடத்தில் இது வரையில் இலங்கைக்கு 11 இலட்சத்து 47 ஆயிரத்து 657 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.

இந்த மாதத்தின் முதல் 5 நாள்களில் ரஷ்யாவிலிருந்து அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து இந்தியாவில் இருந்து மூவாயிரத்து 866 பேர் வந்துள் ளனர். அத்துடன், ஜேர்மனியிலிருந்தும் இரண்டாயிரத்து 11 பேரும், பிரித்தானி யாவிலிருந்து ஆயிரத்து 539 பேரும் வந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப் பிட்டுள்ளது.



# ஊழல் எதிர்ப்பு திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றம்

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை திருத்தச் சட்டமூலம் மற்றும் ஊழல் எதிர்ப்பு திருத்தச் சட்டமூலம் ஆகியன நாடாளுமன்றில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் முன்னதாக கடந்த ஜூலை மாதம் 19 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

பின்னர் அந்தச் சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது எனக் கருதி மீளப்பெறப்பட்டது.

இந்தநிலையில் திரும்பவும் அது பலதிருத்தங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டது. திருந்தப்பட்ட ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்திற்கு எதிராகப் பல மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

பின்னர் அதில் சில சரத்துக்களை திருத்தங்களுடன் நாடாளுமன்றில் முன்வைக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிராம உத்தியோகத்தர்கள் தெரிவுக்கான போட்டிப் பரீட்சை டிசம்பர் முதல் வாரம்

கிராம உத்தியோகத்தர்களுக்கான பணி வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதத்தின் முதல் வாரம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சர் என்ற வகையில் பிரதமர் தினேஷ் குணவர்தன நாடாளுமன்றில் நேற்று இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதி நிலைவரப்படி 2 ஆயிரத்து 763 கிராம உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன எனப் பிரதமர் குறிப்பிட்டார்.

# குவைத்தில் பணிப்பெண்களாக பணியாற்றிய 26 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பினர்

குவைத்தில் பணிப்பெண்களாக பணியாற்றிய 26 இலங்கையர்கள் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக நாடு திரும்பியுள்ளனர்.

விசா காலாவதியான நிலையில் தங்கியிருந்த இந்தப் இலங்கை பணியாளர்கள் அங்குள்ள இலங்கை தூதரகத்தின் தலையீட்டின் மூலம் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

குவைத்தில் இதுபோன்று 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீட்டுப் பணிப்பெண்கள் உள்ளனர் எனவும், அவர்கள் குழுக்களாக நாட்டுக்கு அழைத்து வரப்படுகின்றனர் என்றும் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.



இந்த வீட்டுப் பணிப்பெண்கள் மீதான வழக்குகள் மீளப்பெறப்பட்டு அபராதம் ரத்து செய்யப்பட்டதையடுத்து, அவர்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் என அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 09.11.2023




உங்கள் அணுகுமுறையில் சிறிது கவனம் தேவை. உங்கள் பிரியமானவர்களுடன் பேசும் போது கவனமாகப் பேசவும். முக்கியமான முடிவுகளை இன்று எடுக்காதீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பது கடினமாக இருக்கும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதை தவிர்க்கவும். இதனால் நல்லுறவை உருவாக்க முடியும்.

இன்று அதிக செலவினங்கள் காணப்படும். உங்கள் நிதியை சமாளிப்பது இன்று கடினமாக இருக்கும். பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

சளி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும். குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்த்தல் நல்லது




இன்று தேவையற்ற வாக்குவாதங்கள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். அமைதியாக இருப்பது சிறந்தது.

உங்கள் பணிகள் இன்று கடினமாக காணப்படும். சகபணியாளர்களின் எதிர்ப்பு உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும்.

இன்று உங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே சூடான விவாதங்கள் ஏற்படலாம். நட்புடன் இருப்பது நல்லது.

நிதி வளர்ச்சியில் சில கட்டுப்பாடுகள் காணப்படும். முழுந்த அளவு சேமிக்க வேண்டும். தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்குக் கவலையை உண்டாக்கும்.

பாதுகாப்பற்ற நிலை காரணமாக தலைவலி உயரமுத்தம் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாவீர்கள்.




வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளதால் ஒரு உரையாடலை தொடங்குமுன் ஒருமுறைக்கு இருமுறை யோசிக்க வேண்டும். விட்டுக்கொடுக்கும் அணுகுமுறை தேவை. சிறிய விஷயங்களை பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

உங்கள் பணகளை சாமார்த்தியமாக அற்ற வேண்டும். இல்லையெனில் பணியில் தரத்தை விட்டுக்கொடுக்க நேரும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்காது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

சளி அல்லது முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று மகிழ்ச்சியான நாளாக காணப்படாது. என்றாலும் பொறுமை நன்மை தரும். எதையோ இழந்தது போன்ற உணர்வு உங்கள் மனதில் ஏற்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது சில தடைகளை எதிர் கொள்வீர்கள். உங்கள் பணிகளை முறையாக திட்டமிடுவது இன்று மிகவும் அவசியம்.

மகிழ்ச்சியை தக்க வைக்க இன்று நீங்கள் உங்கள் துணையுடன் சகஜமாகப் பழக வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். நிதிநிலை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். திட்டமிடுவது அவசியம்.

தேவையற்ற குழப்பங்கள் உங்கள் ஆரோக்கியத்தை கெடுக்கும். ஓய்வாக அமைதியாக இருப்பது நல்லது.




இன்று மகிழ்ச்சிகரமாக நாளாக இருக்கும். உங்கள் செயல்களை கவனமாக ஆற்றுவீர்கள். உங்கள் நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை சில கொள்கைகளுடன் ஆற்றுவீர்கள். உங்கள் செயல்திறன் நிரூபணமாகி வளர்ச்சி கிடைக்கும். உங்களுக்கு பாராட்டு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான உணர்வுடன் அணுகுவீர்கள். இதனால் திருப்தி உண்டாகி உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

இன்று அதிக பண வரவு காணப்படும். பணத்தை சேமிக்கும் வாய்ப்பு கிடைக்கும். பயனுள்ள திண்டங்களில் முதலீடு செய்வீர்கள்.




இன்று சிறப்பான நாள். உங்கள் சுய முயற்சி மூலம் வளர்வீர்கள். உங்களிடம் காணப்படும் உறுதியின் காரணமாக உங்கள் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். பிறருடன் சிறப்பாக தொடர்பு கொள்வீர்கள்.

பணி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் பணிகளை திறமையாகக் கையாள்வீர்கள். நீங்கள் முறையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பாகவும் உண்மையாகவும் நடந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணை மகிழ்ச்சியடைவார்.

இன்று வருமானம் அதிகமாகக் காணப்படும். சேமிப்பு உயரும் வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நம்பிக்கை உணர்வு காரணமாக நீங்கள் திடமாக இருப்பீர்கள்.




இன்று காணப்படும் பதட்டத்தை சமாளிக்க சமநிலையான அணுகுமுறை தேவை. திருப்தியான மன நிலை ஏற்பட மனதை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

பணியிடச் சூழல் சிறிது கடினமாக காணப்படும். சகபணியாளர்கள் ஆதரவு கிடைக்காது. இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். அவர்களோடு நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

உங்கள் மனதில் ஏதோ இழந்தது போல உணர்வீர்கள். உங்கள் துணையுடன் சகஜமாகப் பழக வேண்டும்.

இன்று அதிக பண வரவு காணப்படாது. அப்படியே வந்தாலும் தேவையற்ற செலவுகளை சந்திப்பீர்கள்.

இன்று இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது. சிகிச்சை மேற்கொள்வதன் மூலம் உங்களை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம்.




இன்றைய நாள் சமநிலையோடு இருக்கும். உங்கள் பெற்றோரின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். இன்று திருப்தியான நாளாக இருக்கும்.

உங்கள் நேர்மை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். ஆடு உங்கள் சக பணியாளர்களின் கவனத்தை இரிக்கும். உங்கள் உள்ளிருக்கும் திறமைகளை வெளிக்கொணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிபடுத்துவீர்கள். இந்தப் போக்கின் காரணமாக காரணமாக உங்கள் மீதான மதிப்பு உயரும்.

உங்கள் நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். இன்று அதிக பணம் சேமிக்கும் வாய்ப்பு உள்ளது. இதனால் திருப்தியான உணர்வு காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 09.11.2023




ஆன்மீக சொற்பொழிவுகளை கேட்டல், இறைவழிபாடு போன்றவற்றில் ஈடுபடுவதன் மூலம் இன்று ஆறுதல் கிடைக்கும். உங்கள் பேச்சில் கவனம் தேவை. இன்று நண்பர்களை சந்திப்பதை தவிர்க்கவும்.

அதிகப் பணிகள் காரணமாக இன்றைய பணிகள் தள்ளிப் போகும். குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க புத்திசாலித்தனமாக பணிகளை ஆற்ற வேண்டும்.

இன்று நீங்கள் விரும்பும் மகிழ்ச்சி கிடைக்காது. உங்களின் மாறுபடும் மனநிலையை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். இது இருவருக்கும் இடையிலான உறவை பாதிக்கும் என்பதால் இதனை தவிர்த்தல் நல்லது.

பயணத்தின்போது பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது. பணத்தை கையாளும்போது கவனம் தேவை.




இன்று அனுகூலமான நாளாக இருக்கும். இன்று சமநிலையோடு காணப்படுவீர்கள். இன்று புதிய தொடர்புகள் மற்றும் நண்பர்களை ஏற்படுத்திக் கொள்வீர்கள். பிறருடன் கலந்து பேசி மகிழ்வீர்கள்.

கடினமான பணிகளிக் கூட எளிதாகச் செய்வீர்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக உண்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் இருவருக்கும் இடையே நல்லுறவு காணப்படும்.

உங்கள் நிதிநிலை திருப்திகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

உங்கள் தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று எளிய பணிகளைச் செய்வது கூட கடினமாக உணர்வீர்கள்.உங்கள் ஆற்றல் இழந்து காணப்படுவீர்கள். இதனால் விளைவுகளில் பாதிப்பு ஏற்படும். ஓய்வாக இருக்க வேண்டும்.

உங்கள் பணியில் சில அபாயங்களை சந்திக்க நேரும். இது உங்களுக்கு கவலையை உருவாக்கும் பணிகளை கவனமாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும்போது எச்சரிக்கை தேவை. உறவின் நல்லிணக்கம் பாதிக்கும் வகையில் சில தேவையற்ற பேச்சுக்கள் ஏற்படலாம்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று நீங்கள் பணம் இழக்க நேரலாம்.

தொண்டை வலியால் அவதிப்படுவீர்கள். குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்கவும்..




இன்று அதிர்ஷ்டமான நாள். நீங்கள் மிகுந்த முயற்சி செய்து அதில் வெற்றியும் காண்பீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி இன்றைய நாளை சிறப்பாக ஆக்குவீர்கள்.

உங்கள் சமயோசித புத்தி இன்றைய பணிகளை எளிதாக்கும். வெற்றி பெற வேண்டும் என்ற உங்கள் மனநிலை உங்கள் பணியில் பிரதிபலிக்கும்.

உங்கள் துணையிடம் உண்மையாக இருப்பீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

நிதிநிலையில் இன்று வளர்ச்சி காணப்படும். லாபகரமான திட்டத்தில் இன்று நீங்கள் பணத்தை முதலீடு செய்யலாம்.

உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.









# இங்கிலாந்துக்கு ஆறுதல் வெற்றி!

புனே,நவம்பர்09

10 அணிகள் கலந்து கொண்டுள்ள 50 ஓவர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் சிறப்பாக நடை பெற்று வருகிறது.

இந்த தொடரில் இதுவரை நடந்து முடிந்துள்ள லீக் ஆட்டங்களின் முடிவில் இந்தியா, தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியா அணிகள் அரையிறுதிக்கு முன்னேறி உள்ளன.

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை**

| நிலை | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | இந்தியா | 8 | 8 | 0 | 0 | 0 | 16 | 2.456 |
| 02 | தென்னாபிரிக்கா | 8 | 6 | 2 | 0 | 0 | 12 | 1.376 |
| 03 | அவுஸ்திரேலியா | 8 | 6 | 2 | 0 | 0 | 12 | 0.861 |
| 04 | நியூஸிலாந்து | 8 | 4 | 4 | 0 | 0 | 8 | 0.398 |
| 05 | பாகிஸ்தான் | 8 | 4 | 4 | 0 | 0 | 8 | -0.036 |
| 06 | ஆப்கானிஸ்தான் | 8 | 4 | 4 | 0 | 0 | 8 | -0.338 |
| 07 | இங்கிலாந்து | 8 | 2 | 6 | 0 | 0 | 4 | -0.885 |
| 08 | பங்களாதேஷ் | 8 | 2 | 6 | 0 | 0 | 4 | -1.142 |
| 09 | இலங்கை | 8 | 2 | 6 | 0 | 0 | 4 | -1.160 |
| 10 | நெதர்லாந்து | 8 | 2 | 6 | 0 | 0 | 4 | -1.635 |

இந்தத் தொடரில் நேற்று புனேயில் உள்ள மராட்டிய கிரிக்கெட் சங்க ஸ்டேடியத்தில் நடைபெற்ற 40 ஆவது லீக் ஆட்டத்தில் ஜோஸ் பட்லர் தலைமையிலான நடப்பு சாம்பியன் இங்கிலாந்து அணி, ஸ்காட் எட்வர்ட்ஸ் தலைமையிலான நெதர்லாந்துடன் மோதியது .

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. இதன்படி இங்கிலாந்து அணியின் சார்பில் ஜானி பேர்ஸ்டோ மற்றும் டேவிட் மலான் ஆகியோர் முதலாவதாக களமிறங்கினர். இந்த ஜோடியில் பேர்ஸ்டோ 15 ஓட்டங்களில் கேட்ச் ஆனார். அடுத்து களமிறங்கிய ஜோ ரூட் ஓரளவு தாக்குப் பிடித்த நிலையில் 28 ஓட்டங்களில் போல்ட் ஆகி வெளியேறினார். மறுமுனையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி தனது அரைசதத்தை பதிவு செய்த டேவிட் மலான் 87 ஓட்டங்களில் ரன் அவுட் ஆகி வெளியேறினார்.

அடுத்து களமிறங்கிய ஹேரி புரூக் 11 ஓட்டங்களும், ஜோஸ் பட்லர் 5 ஓட்டங்களும், மொயின் அலி 4 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். அடுத்ததாக பென் ஸ்டோக்ஸ்/டன், கிறிஸ் வோக்ஸ் ஜோடி சேர்ந்தார். சிறப்பாக ஆடிய இந்த ஜோடி அணியின் ஓட்ட வீதத்தை வேகமாக உயர்த்தியது. அதிரடி காட்டிய பென் ஸ்டோக்ஸ் தனது அரை சதத்தை பதிவு செய்தார். தொடர்ந்து ஓட்டங்களைக் குவித்த இந்த ஜோடியில் பென் ஸ்டோக்ஸ் தனது சதத்தை பதிவு செய்து அசத்தினார். மறுமுனையில் சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்திய கிறிஸ் வோக்ஸ் தனது அரை சதத்தை பதிவு செய்திருந்தநிலையில் 51 ஓட்டங்களில் கேட்ச் ஆனார்.

அடுத்து களமிறங்கிய டேவிட் வில்லி 6 ஓட்டங்களில் வெளியேறினார். அவரைத் தொடர்ந்து கடைசி ஓவரில் சிக்ஸர் அடிக்க முயன்ற பென் ஸ்டோக்ஸ் 84 பந்துகளில் 6 பவுண்டரிகள், 6 சிக்ஸர் உள்பட 108 ஓட்டங்கள் எடுத்து கேட்ச் ஆனார். இறுதியில் அடில் ரஷித் 1 ஓட்டமும், அட்கின்சன் 2 ஓட்டங்களும் எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். முடிவில் இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 339 ஓட்டங்கள் எடுத்தது. நெதர்லாந்து அணியின் சார்பில் அதிகபட்சமாக பாஸ் லீ லீடே 3 விக்கெட்டுகளும், லோகன் வேன் பீக் மற்றும் ஆர்யன் டுட் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 340 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் நெதர்லாந்து அணி களமிறங்கியது. இங்கிலாந்து அணியினர் துல்லியமாக பந்து வீசியதால் சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் வீழ்ந்தன. ஸ்காட் எட்வர்ட்ஸ் 38 ஓட்டங்களும், வெஸ்லி பரேசி 37 ஓட் டங்களும், சைப்ரண்ட் 33 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். தேஜா 41 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இறுதியில், நெதர்லாந்து 179 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இதன்மூலம் 160 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அபார வெற்றி பெற்றது.

இங்கிலாந்து சார்பில் அடில் ரஷித், மொயின் அலி தலா 3 விக்கெட்டும், டேவிட் வில்லே 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.